# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2017 ஒக்டோபர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.10.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/96)**

அ. நீர்கொழும்பு சுங்க வீதியின் கொத்தலாவல பாலத்துக்கு அருகில் வாவிக்கு அண்மையில் குருகே ஜெடிய என்ற பெயரில் பிரபல்யமான "கின்ஸ் ஐலன்ட்" இறங்கு துறை என்ற பெயரில் ஜெடிய ஒன்று உள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவ் இடத்தில் கட்டுதல் இறங்கு துறை என்று விளம்பரம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

இ. இவ் இறங்கு துறை ஜெயிகா உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டது எனவும் ஓலந்து வாவியின் ஊடாக உல்லாசத் துறை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்டது என்பதனையும் நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. உல்லாச துறை மேம்பாட்டின் ஊடாக நீர்கொழும்பு மாநகர சபைக்கு மற்றும் மக்களுக்கும் வருமானத்தினை உபயோகித்துக் கொள்வதற்காகவே ஜெக்கியா உதவி வழங்கப்பட்டது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. குருகே என்ற பெயர் கொண்ட தனி வியாபாரி ஒருவரிடம் காணப்படும் "கின்ஸ் ஐலன்ட்" என்ற ஹோட்டலுக்கு வாடிக்கையாளர்களை அழைத்து வருவதற்கான படகுச் சேவைக்காக மாத்திரம் அந்த ஜெடிய இன்று பயன்படுத்தப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. இவ் ஜெடிய திறந்து வைக்கப்பட்ட தினத்தில் இருந்து இன்று வரை வருடம் முழுவதும் நீர்கொழும்பு மாநகர சபை பெற்ற வருமானம் எவ்வளவு என்பதனை வருடா வருடம் வெவ்வேறாக காட்ட முடியுமா ? அவ்வாறான வருமானம் ஒன்று கிடைக்கப் பெறாத விடத்து அதற்குக் காரணம் என்ன ?

**02.** **கௌரவ கே.டி. அருணதீபால் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.10.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/97)**

அ. AP/BP/602/15 ஆம் இலக்க விண்ணப்பப்படிவத்தின் கீழ் நாமலுவ கிராமத்தில் 9 ஏக்கரில் 01 றூட் 32.39 பேர்ச்சைக் கொண்ட பாரிய அளவு காணியை (107 காணித் துண்டுகள்) ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அங்கீகாரம் 2015.12.18 ஆந் திகதி நிபந்தனைகளின் கீழேயான கடிதத்தின் மூலம் பண்டாரகமை பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. மேலே கூறப்பட்ட கடிதத்தின் இலக்கம் 6, 7, 8, 9, 10, 11, 12 மற்றும் 13 ஆகிய நிபந்தனைகள் இது வரை நிறைவேற்றப்படவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. பொது வசதிகளுக்குரிய நிலத் துண்டாக ஒதுக்கப்பட்டுள்ள லொட் இலக்கம் 09 மற்றும் 105 என்ற இடங்கள் அதற்குரிய முறையில் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பாக திருப்திப்படுகின்றீர்களா ? அது என்ன காரணத்தின் கீழ் ?

ஈ. 10 ஏக்கர்களைக் கொண்ட பாரிய அளவு இடமொன்றில் மழை நீரைக் கட்டுப்படுத்தவும் மற்றும் வழிந்தோடுவதற்கு கான் அமைப்பு இல்லாதும் முழுமையான காணியின் நீரும் 2 அடி அகலமான மூன்று கான்களின் மூலமே வழிந்தோடச் செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ? அது போதுமானது என்பதையும் வயலில் வழிந்து செல்வது சரியானது என்பது தொடர்பாகவும் பிரதேச சபை திருப்திப்படுகின்றதா ?

உ. பாரிய அளவு பல குறைபாடுகளுடன் இக் காணிக்காக இணக்கச் சான்றுதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

**<u>நடவடிக்கை ஒழுங்கு விதி இல 31(அ) (1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கொடுப்பதற்கு காலம் கேட்கப்பட்ட கேள்வி</u>**

**03.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.10.03 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/ADG-07)**

அ. 2017 செப்டெம்பர் மாதம் 14 மற்றும் 15 ஆகிய தினங்களில் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் மூலம் அஹுங்கல்லை ரியூஹோட்டலில் வேலைத் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டதா ?

ஆ. அவ் வேலைத் திட்டத்தின் நோக்கம் யாது ?

இ. உங்கள் அமைச்சின் ஆலோசனைச் செயற்குழுவின் அங்கத்தவர்களுக்காக மட்டுமா வேலைத் திட்டமானது நடாத்தப்பட்டது ?

ஈ. அப்படியாயின் அதில் பங்குபற்றிய அங்கத்தவர்களின் பெயர்களைச் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

உ. வேலைத் திட்டத்தில் பங்குபற்றிய அலுவலர்களின் பெயர்களைச் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

ஊ. ஆலோசனைச் செயற்குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத அமைச்சர்களும் உறுப்பினர்களும் இதில் பங்குபற்றினார்களா ? அவர்களின் பெயர்களைச் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

எ. இவ் வேலைத் திட்டத்திற்கு செலவு செய்த நிதி எவ்வளவு ?

ஏ. வளவாளர்களாக பங்குபற்றியவர்கள் யார் ?

ஐ. அவர்களுக்கு செலுத்திய நிதி எவ்வளவு ?

ஒ. இவ் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் என்ன ?

**04.** **கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/98)**

அ. கொழும்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்திற்கு உரிய உயிரியல் வைத்திய பொறியியலாளர் திருமதி. டயனா கௌஷனி ஆரியதாச என்பவர் தாபனத்தின் வருகை மற்றும் வெளிச் செல்லும் இடாப்பில் கையொப்பம் இடாது 2004 ஆம் ஆண்டு தொடக்கம் சம்பளத்தினை பெற்றுக் கொள்கின்றார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அக் காரியாலயத்திற்கு உரிய வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அலுவலகர் காரியாலயங்கள் மற்றும் ஏனைய தாபனங்களுக்கு அவசியமற்ற மேலதிக வைத்திய உபகரணங்கள் மற்றும் உரிய தரமற்ற உபகரணங்கள் அவரின் ஒத்துழைப்புடன் கொள்வனவு செய்யப்படுவதாக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? அது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

இ. i. உயிரியல் விஞ்ஞான பொறியியல் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள PE 6817 ஆம் இலக்க கெப் வண்டி அவரின் தனிப்பட்ட விடயத்திற்காக முறையற்ற ரீதியில் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிவீர்களா ? இது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

ii. உயிரியல் வைத்திய உபகரணங்களை வழங்கும் தாபனம் ஒன்றினால் கையூடல் ஒன்றாக வெளிநாட்டுச் சுற்றுலா ஒன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், அது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனையும் அறிவீர்களா ? அது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

iii. இச் சுற்றுலாவானது தாபனக் கோவைக்கு முரணானதும், ஒழுங்கான அங்கீகாரம் ஒன்று இல்லாது 2014.08.28 ஆந் திகதி தொடக்கம் 2014.09.03 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் இடம்பெற்றுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iv. இது தொடர்பாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi**
**(1)17/99)**

அ. 2017 பெப்ரவரி மாதம் 07 ஆந் திகதி மற்றும் அமப/17/105/742 ஆம் இலக்க அமைச்சரவையின் முடிவிற்கு இணங்க அதிபர்களுக்காக இது வரை செலுத்தப்பட்ட படி திருத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதற்கிணங்க கல்வி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்தில் 2017.0314 ஆந் திகதி 16/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அச் சுற்றறிக்கைக்கு இணங்க 2017 மார்ச் மாதம் தொடக்கம் திருத்தப்பட்ட படி செலுத்தப்பட வேண்டும் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 06 மாதங்களைத் தாண்டியுள்ள போதும் எக் காரணத்தினால் அப் படியானது இது வரை செலுத்தப்படவில்லை ?

உ. அது அந் நிலுவைப் படியுடன் எப்போது செலுத்தப்படும் ?

**06.** **கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi**
**(1)17/100)**

அ. மஹரகமை மத்திய மஹா வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபரான திரு. விஜேரத்ன அவர்களுக்கு எத் தினத்தில் கொட்டாவ தர்மபால வித்தியாலயத்திற்கு நியமனம் கிடைத்தது ?

ஆ. அவருக்கு கொட்டாவ தர்மபால வித்தியாலயத்தின் அதிபர் பதவி எப்போது இடை நிறுத்தப்பட்டது ?

இ. தற்போது அவர் இணைக்கப்பட்டுள்ள கல்வி வலையம் எது ?

ஈ. அதற்கிணங்க அவருக்கு பாடசாலை ஒன்றில் அதிபர் பதவி ஒன்றை வழங்க தகைமை உள்ள போதும் அவருக்கு பாடசாலை ஒன்றினை வழங்காமைக்குரிய காரணம் யாது ?

**07.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi**
**(1)17/101)**

அ. மே/மா நீர்கொழும்பு கல்வி வலயத்தின் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் மேல் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. இப் பாடசாலைகளுள் இம் முறை க.பொ.த சான்றிதழ்களுக்கு இணங்க மேல் மாகாண பாடசாலைகளில் க.பொ.த. (சா/த) முடிவுகளில் சித்திபெற்ற சதவீதம் எவ்வளவு ? தேசிய பாடசாலைகளில் சித்திபெற்ற சதவீதம் எவ்வளவு ?

இ. நாடு முழுவதுமான இம் முறை க.பொ.த (சா/த) முடிவுகளுடன் ஒப்பிடும் போது மேல் மாகாணம் எத்தனையாவது இடத்தில் இருக்கின்றது. ?

ஈ. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இம் முறை க.பொ.த. (சா/த) முடிவுகளில் மேல் மாகாணம் குறைந்துள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. இது தொடர்பாக உடனடியாக கவனத்தைச் செலுத்தி மாகாணத்தின் மாகாண பாடசாலைகளின் முடிவுகளை உயர்த்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஊ. வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து இது தொடர்பான விடயங்களை வினவுவீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. அனுதாபப் பிரேரணை

**01. மேல் மாகாண மாகாண சபையின் முன்னை நாள் கௌரவ ஆளுநர் அல்ஹாஜ் செய்யத் அஹமட் அலவி மௌலானா அவர்களது மறைவிற்காக முன்வைக்கப்படும் அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை**

மாகாண சபை முறை ஆரம்பிக்கப் பட்ட பின்னர், மேல் மாகாணத்திற்காக நியமிக்கப்பட்ட ஐந்தாவது ஆளுநராக சுமார் 12 வருட கால அளவு அப் பதவியில் கடமையாற்றிய கௌரவ அல்ஹாஜ் செய்யத் அஹமட் அலவி மௌலானா அவர்கள் மேல் மாகாண சபைக்கும் மேல் மாகாண மக்களுக்கும் மேற்கொண்ட சேவையினை பாராட்டுவதுடன், அவரின் மறைவிற்காக மேல் மாகாண சபை தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

[முன்வைப்பவர் - கௌரவ சபாநாயகர்]

**02. மேல் மாகாண மாகாண சபையின் முன்னை நாள் கௌரவ மாகாண சபை உறுப்பினர் யூ.எஸ். பெரேரா அவர்களின் மறைவிற்காக முன்வைக்கப்படும் அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை**

மேல் மாகாண மாகாண சபையின் முதலாவது மாகாண சபையினை அங்கத்துவப்படுத்தி கம்பஹா நிர்வாக மாவட்டத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியினை அங்கத்துவப் படுத்தி கௌரவ உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்ட கௌரவ யூ.எஸ். பெரேரா உறுப்பினரினால் கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஒருவராக சுமார் ஐந்து வருட காலம் மேல் மாகாண மாகாண சபைக்கும், மேல் மாகாண மக்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட சேவையைப் பாராட்டுவதுடன், அவரின் மறைவு தொடர்பாக இம் மேல் மாகாண மாகாண சபை தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

[முன்வைப்பவர் - கௌரவ சபாநாயகர்]

## X. சபை நடவடிக்கை

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :**

**பிரேரணை** :

இன்றைய தினம் (2017.10.17 ஆந் திகதி) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நடவடிக்கை விடயத்தின் செயற்பாடுகள் முன்னுரிமை பெற வேண்டும்.

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ யசபால கோறலகே - பிரதித் தவிசாளர் அவர்கள்**

பௌத்த சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் மற்றும் அழிந்து சென்ற பாரம்பரிய கலாச்சாரங்களைப் பாதுகாக்கும் நோக்கில் நடாத்தப்படும் பெரஹரைகளுக்காக யானைகள் அவசியமா என மஹா சங்கத்தினர் மற்றும் அந்தந்த பெரஹரைகளை நடாத்தும் குழுக்களுடன் வினவி அதற்குத் தேவையான யானைகளை வழங்குவதற்குத் தேவையான வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)17/07)**

**02. கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய 2 மாவட்டங்களுக்கு உரிய பிரதேசத்தில் அமைந்துள்ள போல்கொட கங்கை எனவும், ஆறு எனவும் அழைக்கப்படும் ஈர நிலப் பகுதியானது மாகாணத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தக் கூடிய பெறுமதி மிக்க வளம் ஒன்றாகும், பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியில் இந்த ஈர நில அமைப்பு தற்போது பல்வேறுபட்ட அழிவுகளுக்கு உட்பட்டு

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்பு இல்லாத எந்தவொரு நிர்வாக தாபனத்தினதும் நேரடி அபிவிருத்தி ஒன்றுக்கு பங்களிப்புச் செய்யப்படாது கைவிடப்பட்டுள்ள வளம் ஒன்றாக மாறியுள்ளது. நன்நீர் மீன் வளர்ப்பு, மாகாண சுற்றுலா வியாபாரம், பொருட் போக்குவரத்து, ஈர நிலத்தினை அண்டியதான மருந்து, மருந்துச் செடிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி நிலைமையைப் போசிக்கக் கூடிய பல வகையான பெறுமதி மிக்க வளம் ஒன்றாக உபயோகத்திற்கு எடுக்கக் கூடிய இந்த சுற்றாடல் அமைப்பு தொடர்பாக விரிவான விஞ்ஞான ரீதியிலான கணிப்பின் பின்னர் நிர்வாகத் தாபனம் ஒன்றினை இணைத்து போல்கொட ஈர நிலப் பகுதியின் நன்மைக்காக அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)17/08)**

## XII. பொது நடவடிக்கை

**01. கௌரவ சுமித்லால் மென்திஸ் - சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக சேவைகள், சமூக நலன்புரி நன்நடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் மற்றும் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை** :

<u>**மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்க விதிக் கோவை**</u>
**(சட்டமூலம்)**

மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்க விதிக் கோவை சட்டமூலம் அரசின் அமைச்சரவையிற்கு சமர்ப்பித்த பின்னர், அதனை மாகாண சபைகளின் அங்கீகாரத்திற்காக முன்வைக்குமாறு அமைச்சரவையில் இருந்து ஆலோசனைக் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அதற்கிணங்க இவ் ஒழுக்க விதிக் கோவை சட்டமூலத்தை இம் மேல் மாகாண மாகாண சபைக்கு அங்கீகாரத்திற்காக முன்வைத்து உரிய அங்கீகாரத்துடன் மீண்டும் அரசின் அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு அறிவித்து அச் செயலாளரினால் அனுப்பப்பட்டிருந்த **PL/10G/08/15** ஆம் இலக்க 2017.05.27 ஆந் திகதி கடிதம் தொடர்பாக 2017.06.21 ஆந் திகதி நடைபெற்ற இம் மேல் மாகாண மாகாண சபையின் சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடி வரப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க, இந்த ஒழுக்க விதிக் கோவை சட்டமூலத்தை மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிப்பது தொடர்பாக மேலும் தீர்மானத்தை எடுப்பதற்கு 2017.09.20 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாண அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது. அன்றைய தினம் மற்றும் 2017.09.27 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாணத்தின் அமைச்சரவைக் கூட்டத்தில் இவ் ஒழுக்க விதிக் கோவை சட்டமூலத்தை கலந்துரையாடி மாகாண சபைக்கு சமர்ப்பித்து மாகாண சபையின் இணக்கத்தினைப் பெற்றுக் கொண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிப்பது சிறந்தது என அங்கீகாரம் கிடைத்த படியால் இந்த ஒழுக்கவிதிக் கோவை சட்டமூலம் தொடர்பாக இன்றைய தினம் (2017.10.17 ஆந் திகதி) இம் மேல் மாகாண சபையில் கலந்துரையாடி இம் மாகாண சபையினால் எடுக்கப்படும் முடிவினை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.10.04 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.

**இலக்கம் 01**
**மற்றும்**
**இலக்கம் 02**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட **PL/10G/08/15** ஆம் இலக்க 2017.05.27 ஆந் திகதி கடிதம் மற்றும் அதனை சபைச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரதம செயலாளரின் **CSO/ADM/25/14/02/01** ஆம் இலக்க 2017.06.07 ஆந் திகதி கடிதம்.

**உரிய இணைப்பு இலக்கம் 03**

மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்க விதிக் கோவை
- 2015 - சட்டமூலம்
(மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு)

2017.06.07

சபைச் செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை,
மேல் மாகாணம்.

**மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை ஒன்றினைத் தயாரித்தல்**

மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட பின்னர் அச் சட்ட மூலத்தை மாகாண சபைகளின் அங்கீகாரத்திற்காக முன்வைக்குமாறு அமைச்சரவையின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளரின் **PL/10G/08/15** ஆம் இலக்க 2017.05.27 ஆந் திகதி கடித்ததின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

02. இதற்கிணங்க இத்துடன் உங்களுக்கு அனுப்பப்படும் ஒழுக்கக் கோவைச் சட்ட மூலத்தை சபைக்கு சமர்ப்பித்து மேல் மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு எனக்கு அறிவிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

கையொப்பம் :

கே.என்.சூரியாரச்சி
உதவிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்),

எம்.ஏ.பீ. தயா செனரத்
பிரதம செயலாளர்
மேல் மாகாணம்.

**பிரதிகள்** -

**01.** செயலாளர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு
- உங்களது **PL/10G/08/15** ஆம் இலக்க 2017.05.27 ஆந் திகதி கடிதத்திற்கு இணங்க த.செ.அ.பொ

**02.** பிரதம செயலாளரின் இணைப்புச் செயலாளர் - த.செ.அ.பொ

2017.05.27

பிரதம செயலாளர்
மேல் மாகாண சபை.

**<u>மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை ஒன்றினைத் தயாரித்தல்</u>**

மேற் குறித்த விடயம் தொடர்பாக உங்கள் மாகாணத்தில் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் தயாரித்து நிறைவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பின்னர் மாகாண சபைகளின் அங்கீகாரத்திற்கு முன்வைக்குமாறு அமைச்சரவையின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது.

இதற்கிணங்க அவ் ஒழுக்கக் கோவையின் பிரதி ஒன்றினை இத்துடன் அனுப்புவதுடன், அதனை விரைவாக உங்களது மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்து மீண்டும் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக எனக்கு அனுப்புமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

எச்.டி. கமல் பத்மசிறி
செயலாளர்